Stock file

வருவாய் மற்றும் பேரிடர்
மேலாண்மைத் துறை,
பணிகள் அலகு, பணி9(2) பிரிவு,
தலைமைச் செயலகம்,
சென்னை–600 009.

அரசுக் கடித எண்.9694/பணி9(2)/2021–3, நாள் 28.06.2021

அனுப்புநர்
திரு.குமார் ஜெயந்த், இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
கூடுதல் தலைமைச் செயலாளர் /
வருவாய் நிருவாக ஆணையர்,
சேப்பாக்கம், சென்னை– 5.

அய்யா,

பொருள்: பொதுப் பணிகள்–கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டவர்களின் பணியினை வரன்முறைப்படுத்துதல்– ஆணை வெளியிடப்பட்டது– தெளிவுரை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை (நிலை) எண்.80, தொ.(ம).வே.வா. துறை, நாள் 02.03.2016.
2. அரசாணை (நிலை) எண்.48, தொ.(ம).வே.வா. துறை, நாள் 26.02.2021.
3. தங்களது கடித எண். ஆகு3/18395/2020, நாள் 11.03.2021.

*******

பார்வையில் காணும் அரசாணைகள் மற்றும் கடிதத்தின் மீது தங்களது கவனம் ஈர்க்கப்படுகிறது.

2. கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட அரசு அலுவலர்களின் பணியினை வரன்முறைப்படுத்துதல் தொடர்பாக பின்வருமாறு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

| அரசாணை (நிலை) எண்.80, தொ.(ம)வே.வா. துறை, நாள் 02.03.2016 | தெளிவுரை |
|---|---|
| (6.1) 01.02.2016 வரை கருணையடிப்படையில் பணியமர்த்தப்பட்டு, எந்தவித விதித்தளர்வு (Relaxation of rules) மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு (Exemption of Government orders) தேவைப்படாத அனைத்து அலுவலர்களின் பணிநியமனமும் இவ்வரசாணை மூலம் நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு வரன்முறைபடுத்தப்படுகிறது. | 01.02.2016 வரை கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட எந்தவித விதித்தளர்வு மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு தேவைப்படாத அரசுப் பணியாளரின் பணியினை சம்பந்தப்பட்ட நியமன அலுவலர்களே (appointing authority) வரன்முறை செய்யலாம். |
| (6.2) மேலே உள்ள ஆணையினை செயல்படுத்த சம்பந்தப்பட்ட நியமன அலுவலர்கள் (appointing authority) அவரவர் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட அரசு பணியாளரின் பணியினை வரன்முறை செய்திட உரிய செயல்முறை ஆணை (proceedings) வெளியிட்டு, தொடர்புடைய அரசு பணியாளரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும் என அறிவுறுத்தப்படுகின்றனர். | |

Scanned by CamScanner

| அரசாணை (நிலை) எண்.48, தொ.(ம)வே.வா. துறை, நாள் 26.02.2021 | தெளிவுரை |
| --- | --- |
| **(5.1)** 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணையடிப்படையில் பணியமர்த்தப்பட்டு, எந்தவித விதித்தளர்வு (Relaxation of Rules) மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு (Exemption of Government Orders) தேவைப்படாத அனைத்து பணியாளர்களின் பணி நியமனமும் இவ்வரசாணை மூலம் நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு வரன்முறைபடுத்தப்படும்.<br><br>**(5.2)** மேலே உள்ள ஆணையினை செயல்படுத்த, சம்பந்தப்பட்ட நியமன அலுவலர்களின் (Appointing authority) ஒரு நிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர்கள் (one level higher than the appointing authority), அவரவர் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட அரசு பணியாளரின் பணியினை வரன்முறை செய்திட, உரிய செயல்முறை ஆணை (Proceedings) வெளியிட்டு, தொடர்புடைய அரசு பணியாளரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும் என அறிவுறுத்தப்படுகின்றனர். | கிராம நிருவாக அலுவலருக்கு பணிநியமன அலுவலர், கோட்டாட்சியராகவும், இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர்களுக்கு பணி நியமன அலுவலர், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) என்ற நிலையில், ஒரு நிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர் மாவட்ட வருவாய் அலுவலர்கள் (அல்லது) மாவட்ட ஆட்சியர் பணி நியமன அலுவலராக இருக்கும் பட்சத்தில் ஒரு நிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர் என்ற நிலையில் கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் அவர்கள் அவரவர் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட அரசு பணியாளரின் பணியினை வரன்முறை செய்யலாம். |

3. மேலும், அரசாணை (நிலை) எண்.80, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 02.03.2016–ல் வெளியிடப்பட்டு ஐந்து ஆண்டுகள் கடந்த நிலையில், கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டு பணிவரன்முறை செய்யாமல், நிலுவையில் உள்ள இனங்கள் மீது விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு தங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள் நம்பிக்கையுள்ள,

சி. [signature] 28/6/2021

அரசு முதன்மைச் செயலாளருக்காக.

[initials] 28.6.2021

Scanned by CamScanner